வெளியே போங்க...!

எளிய மக்களின் பெரும் நம்பிக்கையாக தமிழ்நாட்டின் கல்வி அமைப்பு திகழ்ந்து கொண்டிருக்கிறது. தங்களின் பிள்ளை களையும் தங்களது தலைமுறையையும் கல்வியால் முன்னேற்றிவிடலாம் எனும் பேராவல் அடித் தட்டு மக்களிடம் இருக்கிறது. அதன் காரணமா கத்தான் தாங்கள் என்ன மாதிரியான பொரு ளாதார சமூக இன்னல்களுக்கு ஆளானாலும், தங்களின் பிள்ளைகளை பள்ளிகளுக்கு அனுப் புவதை முதன்மை பணியாக கருதுகிறார்கள் விளிம்புநிலையில் உள்ள மக்கள். தங்களின் வீட்டில் என்ன சுக துக்கங்கள் நிகழ்ந்தாலும் பிள்ளைகளை உடனடியாக பள்ளிகளுக்கு அனுப்புவதை கடமையாகவே செய்து வருகி றார்கள் நமது மக்கள்!

இதுபோன்ற நம்பிக்கை அளிக்கும் கல்வி அமைப்பிற்கு பெரும் வெளிச்சமாக இருப்பது அரசுப் பள்ளிகள்தான்! அரசுப் பள்ளிகள்தான் எளிய மக்களின் எதிர்கால அரணாகத் திகழ்கி றது. விடுதலைக்குப் பிறகான தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றங்கள் நடந்தாலும், ஒவ்வொரு ஆட்சியாளரும் பள்ளிகளில் மகத்தான சாத னைகளை படைத்தார்கள் என்பதை மறுப்ப தற்கில்லை. இத்தொடர்ச்சி என்பது அரசியல் கடந்த சிந்தனையில் மகிழ்ச்சியை தரக்கூடி யது. ஆனால் இன்றைய சூழலில் கல்வி அமைப்பை காக்கும் அரசுப் பள்ளிகள் எனும் பெருஞ்சுவற்றை தகர்க்கும் வேலைகள் நடந் துகொண்டிருப்பதாகவே தோன்றுகிறது.

சமூக ஊடகங்களில் 'இனிமேல் இதுதான் கடவுள் வாழ்த்து...' என ஒரு படப்பாடலை காண்பித்து நய்யாண்டி செய்கிறார்கள். ஆனால் இந்த நய்யாண்டி என்பது உண்மை யின் மறுவடிவமாகவே உள்ளது என்பதை மறுக்க முடியவில்லை. கவலை மேலோங்கு கிறது!

'A B C D, அ ஆ இ ஈ...' எனச் சொல்ல வேண் டிய மாணவச் செல்வங்களும், தாங்கள் படித் ததை ஆசிரியர்களிடம் வாசித்துக்காட்ட வேண் டிய மாணவர்களும் கைக்கட்டிக் கொண்டு 'நண்பா... நண்பா...' என படப்பாடலை பாடிக்கொண்டிருக்கிறார்கள். இதனை த.வெ. கட்சியினர் ரசித்து வீடியோவும் எடுத்துள்ளார் கள் என்பது வக்கிரமானது. குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பிவிட்டு, அன்றாடப் பணியை செய்துகொண்டிருக்கும் பெற்றோர்களுக்கு இந்த அவலம் அந்நேரத்தில் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. பள்ளி முடிந்து வீட்டிற்கு வரும்

அன்பில் மகேஸ் பொய்யாமொழி
பள்ளிக் கல்வித் துறை முன்னாள் அமைச்சர்

குழந்தைகளை அதட்டி 'டிவி பார்க்காம படி...' என்பார்கள் பெற்றோர்கள். **ஆனால் சில குரூரமானவர்கள் பள்ளிக்கு சென்ற குழந்தை களிடம் 'படிக்காதே பாட்டுப் பாடு...' என்கிறார் கள். எளிய மக்களின் வருங்கால நம்பிக் கையை, ஒரு தலைமுறையை கெடுக்கும் செயல் தொடங்கியுள்ளது.**

உயர்கல்வித் துறை அமைச்சர் ஒரு பள் ளிக்கு சென்று நடனம் ஆடுகிறார். அதில் தவ றில்லை. ஆனால், அந்தப் பாட்டின் வரிகளும், அங்கே வெளிப்பட்ட பக்குவமின்மையும் முகம் சுளிக்க வைக்கின்றன. "Good Touch Bad Touch" பற்றி சொல்லிக்கொடுக்க வேண் டிய அமைச்சரே குழந்தைகளிடம் நடந்து கொள்ளும் விதம் என்பது அமைச்சருக்கானது அல்ல. அநாகரிகமான செயலை அமைச்சரே செய்துகொண்டிருக்கிறார்!

யாரை குளிர்விக்க மாணவர்களை பயன்ப டுத்துகிறார்கள் ஆளுங்கட்சியினர் என்பது புரி யவில்லை. மாணவர்களை கொண்டு முதல மைச்சரின் படத்தை வரைவது! முதலமைச்சர் படத்தை வரைந்து அதில் மாணவர்களை அமர வைத்து சாதனைகள் நிகழ்த்துவது என் பது யாருக்காக? மாணவர்கள் தங்களின் திற மையின் மூலம் சாதனை படைக்க ஊக்கு விக்க வேண்டும் எனும் எண்ணம் உங்கள் அரசுக்கும் உங்கள் கட்சிக்கும் இருப்பதாக தெரியவில்லை. இதுபோன்ற செயல்கள் மாணவர்களின் திசைவழியை மடைமாற்று வது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் நம்பிக் கையை சிதைப்பது ஆகும். "வாழ்க" கோஷத் தையெல்லாம் மாணவர்கள் சொல்ல தூண்டும் சமூக விரோதிகள் யார்? அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? தயவு செய்து பள்ளிகளை விட்டு வெளியே போய்வி டுங்கள்!

பள்ளிகளுக்குள் நுழைய வேண்டும் என் றால் மக்கள் பிரதிநிதிகள்தான் செல்ல வேண் டும். கட்சி பிரதிநிதிகளுக்கு அங்கே எவ்வித அனுமதியும் கிடையாது! பள்ளி நிர்வாகம் அனு மதித்தாலும் அங்கே முதலமைச்சரின் போட் டோவை காட்டி மாணவர்களை உணர்ச்சி வசப்படுத்த எந்த அதிகாரமும் உங்களுக்கு கிடையாது! படிப்பறையில் மாணவர்கள் - ஆசி ரியர்களை தவிர உங்களுக்கு என்ன வேலை? உங்களின் வெற்று புரட்சிகளை மக்களிடம் வந்து காண்பியுங்கள். உங்களின் செயல் மாணவர்களின் கைகளில் இருந்து புத்தகத்தை பிடுங்குவது போல் உள்ளது.

இதை எடுத்துச் சொல்வதற்கு அக்கட்சியில் எவருமே இல்லை என்பதுதான் சகித்துக் கொள்ள முடியாத உண்மையாகவும் இருக்கி றது. பாசிச மனப்பான்மையில் முதலமைச் சரும் த.வெ.க தலைவருமான விஜய் உள் ளாரா? எனும் சந்தேகம் எழுகிறது. அடுத்த தலைமுறையின் கண்கள் புத்தகத்தையும் கரும்பலகையையும் மட்டுமே பார்க்க வேண் டுமே தவிர, உங்களின் அநாகரியங்களை பார்க்கக் கூடாது. 'கடமை கண்ணியம் கட்டுப் பாடு' என்ற பேரறிஞர் அண்ணாவை மேற் கோள் காட்டும் தாங்கள், தங்களின் கட்சியின ருக்கு கட்டுப்பாடு என்றால் என்ன? என ஒரு அறிக்கையாவது விட்டுள்ளீர்களா? கொஞ்சம் கூட நாகரிகம் இல்லாமல் பள்ளிகளுக்கு த.வெ.க கொடியை கட்டுவதெல்லாம் உங்க ளின் கண்களுக்கு தெரிகிறதா சி.எம். சார். இதற்கு கூட வாயைத் திறக்க மாட்டீர்களா?

உங்களை நான் விமர்சிக்கவில்லை. உங் கள் குற்றங்களை சுட்டிக்காட்டவில்லை! அன் பான வேண்டுகோள் மட்டுமே விடுக்கிறேன்.

'தயவுசெய்து அரசுப் பள்ளி மாணவர்களை தொந்தரவு செய்ய வேண்டாம்' என்று மட்டும் சொல்லுங்கள். 'அவர்கள் பகுத்தறிவு கொண்ட மனிதர்களாக உருவாக வேண்டும். அதனால் அவர்களை தொந்தரவு செய்யாதீர்கள் நண்பா நண்பீஸ்' என ஒரு முறையேனும் சொல்லி விடுங்கள்.

இனிமேலும் அரசு கண்ணைக் கட்டிக் கொண்டு இருக்கக் கூடாது! எளிய மக்களின் நம்பிக்கை காப்பாற்றப்பட வேண்டும். அரசுப் பள்ளி வளாகங்களுக்குள் அநாகரிமான செயல்களை அரங்கேற்றம் செய்யாதீர்கள்.

ராமன் கோயில் நன்கொடைகளில் ஊழல்! லட்டு தயாரிப்பில் மோசடி! கோயில் தங்கங்களில் முறைகேடு!

பகல் கொள்ளை வேடதாரிகளின் ஊழல்களை மக்கள் மறக்கமாட்டார்கள்!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூன் 24 -

ராமன் கோயில் நன்கொடை களில் ஊழல்! திருப்பதி லட்டு தயா ரிப்பில் மோசடி!! சபரிமலை அய்யப்பன் கோயில் தங்கங்க ளில் முறைகேடு! பக்தியின் பெய ரால் பகல் கொள்ளையா? 'பக்தி பகல் வேடதாரி'களின் ஊழல் களை மக்கள் மறக்கமாட்டார்கள். அயோத்தி ராமனை - 'அபேஸ் ராமனாக்க'லாமா? என்று திராவி டர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

12 ஆண்டுகள் பா.ஜ.க. ஆட் சியில் ஊழல் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று தம்பட்டம் அடிக்கிறார்கள் பிரதமர் நரேந்திர மோடி முதல் ஒன்றிய அமைச்சர் கிஷன் ரெட்டி வரை!

மக்களின் மறதியின் மீது அவ் வளவு நம்பிக்கையோ? வியாபம் ஊழல் தொடங்கி பி.எம்.கேர், தேர்தல் பாண்டுகள் வரை எல்லா குற்றச்சாட்டுகளும் மறக் கடிக்கப்பட்டுவிட்டன என்று கரு துகிறார்களோ?

குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான திட்டம்!

அதிகம் முந்தைய செய்திக ளுக்குப் போகாவிட்டாலும், பா.ஜ.க. ஆட்சியின் மிகப்பெரிய சாதனையாகப் பேசப்படும் அயோத்தி ராமன் கோவில் விவ காரத்தையாவது கணக்கில் கொள்ள வேண்டாமா? கட்ட வேண்டும் என்று ஆரம்பித்த காலத்தில் இருந்தே ஏராளமான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான திட்டமாயிற்றே! மேனாள் விஷ்வ ஹிந்து பரிஷத் தலைவர் அசோக் சிங்கால் முதற்கொண்டே ஊழல் குற்றச்சாட்டுக்கு இலக்கானவர் கள் தானே! அதன் அடுத்த விரி வான கட்டம் தான், தற்போதைய ராமன் கோவில் நன்கொடை விவகாரம்!

பா.ஜ.க. வெகுமக்களிடம் சேர் வதற்கான அரசியல் அஜெண்டா வாகக் கையில் எடுத்தது அயோத் தியில் பாபர் மசூதி இருக்கும் இடத்தில் ராமன் கோவில் கட்ட வேண்டும் என்ற விவகாரத்தைத் தான்! ஏறத்தாழ 35 ஆண்டுக ளில் அதற்கான போராட்டங்கள், கலவரங்கள், ர(த்)த யாத்திரை கள், பாபர் மசூதி இடிப்பு, இடிப்பு வழக்கு, பாபர் மசூதி நிலத்தை ராமர் கோவில் கட்ட அனுமதித்த தீர்ப்பு, இவற்றையெல்லாம் கடந்து 2024 தேர்தல் வரைக் கும் ஜவ்வாக அதனை இழுத்துக் கொண்டு வந்து, அவ்வாண்டு ஜனவரியில் அதனைத் திறந்து வைத்தார் பிரதமர் மோடி.

அப்போது நடைபெற்ற கும்பா பிஷேகத்திற்குப் பிறகு ராம பக்தர் கள் காணிக்கையாக வழங்கிய பணம், தங்கம் மற்றும் நகைகள் காணாமல் போய்விட்டன அல் லது தவறாகப் பயன்படுத்தப்பட் டுள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் குற்றம் சாட்டினர். ஆனால், சிறீ ராம ஜென்மபூமி தீர்த்த க்ஷேத்ர அறக்கட்டளை யும், உத்தரப் பிரதேச அரசும், பா.ஜ.க.வும் இந்தக் குற்றச்சாட்டு களை முதலில் உறுதியாக மறுத் தனர். ஆனால், எல்லா பக்கமி ருந்தும் நெருக்கடி முற்றியது.

அறக்கட்டளை ஆட்டத்தைத் தொடங்கியது!

சி.பி.அய். விசாரணை மற் றும் சிஏஜி தணிக்கை கோரி பொதுநல மனுவை அலகாபாத் உயர் நீதிமன்றம் விசாரிக்க வுள்ள நிலையில், விசாரணைக்குத் தாங்களே கோரிக்கை விடுப்ப தாக அறக்கட்டளை தனது ஆட் டத்தைத் தொடங்கியது. ஆனா லும், முறைகேடு நடந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை என் றும், தற்போது நடைபெற்று வரும் விசாரணை உண்மை களை வெளிக்கொண்டு வரும் என்றும் அவர்கள் தெரிவித்து வந்தனர். மாநில அரசின் மூன்று பேர் அடங்கிய சிறப்புப் புலனாய் வுக் குழுவும் (SIT) ஊழல் குறித்து ஆய்வு செய்து வருகிறது.

இந்த விவகாரம் ஊடகங்க ளில் தொடர்ந்து பேசுபொருளா கவே, சுதாரித்துக் கொண்ட உத் தரப்பிரதேச முதலமைச்சர் சாமியார் ஆதித்யநாத், "ராமன் கோவில் நிதி முறைகேடு பற்றி யாராவது பேசினால், 7 பிறவிக்கும் பாவம் சேரும்" என்று 'மிரட்டல் பானத்தை' விடுத்துள்ளார்!

வேதங்கள், மனுஸ்மிருதி யின் பார்வையில் தான், நாத்தி கர்களான நம் கணக்கில் ஏராள மான பாவங்கள் இருப்பதாகச் சொல்வார்களே! கூடுதலாக ஒன் றிரண்டு சேர்ந்தாலும் அதைப் பற்றி கவலைப்படாமல் உண்மை உலா வரவேண்டாமா?

'இந்தியா டுடே!'

'இந்தியா டுடே' செய்தி நிறுவ னத்தின் தகவலின்படி, "சிறீ ராம் ஜென்மபூமி தீர்த்த க்ஷேத்ரா அறக்கட்டளையின் வங்கிச் செயல்பாடுகளை நிர்வகித்தல், கோயிலில் பெறப்படும் ரொக்க

நன்கொடைகளைக் கையாளு தல், ராமன் கோயிலில் பக்தர்கள் காணிக்கையாகச் செலுத்திய பணத்தாள்களைப் பிரித்தல், அடுக்கி வைத்தல் மற்றும் எண் ணுதல் ஆகிய பணிகளும் ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா வசம் ஒப்படைத்திருந்ததாம். அந்த வங்கி, பணத்தை எண் ணும் பணியை வாரணாசியைச் சேர்ந்த ஒரு தனியார் பாதுகாப்பு நிறுவனத்திடம் ஒப்படைத்திருந்த தாகத் தகவலறிந்த வட்டாரங்கள் 'இந்தியா டுடே'விடம் தெரிவித் தன. இருப்பினும், அந்த நிறுவ னம் இப்பணிக்காக அயோத்தி யைச் சேர்ந்த தொழிலாளர்களை ஈடுபடுத்தியதாகவும், ராமன் கோயில் அறக்கட்டளையுடன் தொடர்புடைய நபர்களின் பரிந்து ரையின்பேரில் பல நியமனங்கள் செய்யப்பட்டதாகவும் கூறப்படு கிறது. ராமன் கோயில் அறக்கட் டளையின் ஊழியரான அனுகுல் மிஸ்ரா, தனது மைத்துனர் லவ் குஷ் மிஸ்ராவை பணத்தை எண்ணும் குழுவில் நியமிக்க உதவினார் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஊழியர் நியமன நடைமுறை கள் மற்றும் அதில் நடந்ததாகக் கூறப்படும் முறைகேடுகள் குறித் தும் சிறப்பு விசாரணைக் குழு ஆய்வு செய்துள்ளதாம்!

வளாகத்திற்குள் நுழையும் மற்றும் வெளியேறும் பணியா ளர்கள் மீது போதுமான சோத னைகள் இல்லாதது உள்ளிட்ட பாதுகாப்பு நடைமுறைகளில் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் இருப்பதை விசாரணைக் குழு கண்டறிந்தது. தொழிலாளர்கள் வளாகத்திற்குள் கொண்டு செல் லும் அல்லது வெளியே கொண்டு வரும் பொருட்களைச் சரிபார்க்க வலுவான வழிமுறை எதுவும் இல்லை என்றும், இது நன்கொ டைகளைக் கையாள்வதில் கண் காணிப்புக் குறைபாடு குறித்த கவலைகளை எழுப்புவதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. நன்கொடைகளை எண்ணும் பணியில் ஈடுபட்ட ஊழியர்க ளுக்கு அதற்கெனத் தனி சீருடை, ஆடை விதிமுறைகள் இருந்த போதிலும், அவர்கள் பெரும்பா லும் சாதாரண உடைகளிலேயே அறக்கட்டளை அலுவலகத்திற்குள் காணப்பட்டதாக 'இந்தியா டுடே' செய்தி வெளியிட்டுள்ளது.

திருப்பதி லட்டு தயாரிப்பில் முறைகேடு நடந்துள்ளதாக எழுப் பப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பான விசாரணை:

நாடு முழுவதும் அதிர்வலைகள்!

புகழ்பெற்ற திருப்பதி கோவில் லட்டில் சேர்க்கப்படும் நெய்யில் விலங்குகளின் கொழுப்பைக் கலந்ததாக ஒய்.எஸ்.ஆர். காங் கிரஸ் ஆட்சி மீது தற்போதைய ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு குற்றம் சாட்டினார். இந்தக் குற்றச்சாட்டுக்கு ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் மறுப்பு தெரிவித்து வந்தது. திருப்பதியில் கொடுக்கப் படும் லட்டினை ஆய்வுக்குட் படுத்தியதில் மாட்டுக்கொழுப்பு உள்ளிட்ட விலங்குகளின் கொழுப்புகள் சேர்க்கப்பட்டுள்ள தாக அதிர்ச்சி தகவல் வெளியா னது. இது நாடு முழுவதும் அதிர் வலைகளை ஏற்படுத்தியது.

இதையடுத்து நெய் விநியோ கம் செய்த நிறுவனங்கள் நெய் டின்கள் குஜராத்தில் உள்ள ஆய் வகத்துக்கு அனுப்பப்பட்டு சோதிக் கப்பட்டன.

திருப்பதிக்கு நெய் விநியோ கம் செய்த திண்டுக்கல் மாவட்டம் பிள்ளையார் நத்தம் பிரிவில் உள்ள ஏ.ஆர். டெய்ரி புட் நிறுவ னத்தின் நெய்யில் 20 சதவீதம் மட்டுமே தரம் இருப்பதாகவும், அதில் சோயா பீன்சில் இருந்து எடுக்கப்பட்ட எண்ணெய், மீன் எண்ணெய், மாட்டிறைச்சி கொழுப்பு உள்ளிட்ட பொருட்கள் கலப்படம் செய்யப்பட்டிருக்கின் றன என்பன ஆய்வில் தெரிய வந்ததாக கூறப்பட்டது. தற்போது இந்த நிறுவனத்தின் உரிமையா ளர் ராஜசேகரின் வீடு, நிறுவனம் என இரண்டு இடங்களில் நேற்று காலை 8 மணி முதல் இரவு வரை அமலாக்கத் துறையினர் 12-க்கும் மேற்பட்டோர் நான்கு கார்களில் வந்து சோதனை மேற்கொண்டனர். அதோடு டில்லி, மும்பை, அகில்யாநகர், பிகானர், டேராடூன், குண்டூர் மற் றும் ஸூர்க்கி ஆகிய நகரங்களில் இந்த நிறுவனத்திற்குச் சொந்த மான 15 இடங்களில் இந்தச் சோதனைகள் நடத்தப்பட்டுள் ளன. இந்தச் சோதனையில் போது, கணக்கில் வராத பணம் மற்றும் நெய் கலப்பட ஊழல் மூலம் ஈட்டப்பட்டப் பணத்தில் வாங்கிய சொத்துகளை அமலாக் கத்துறை கைப்பற்றியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நெய்யும், மெய்யும் படும்பாடு!

அப்படியே கேரளா பக்கம் வந் தால், அம் மாநிலத்தில் உள்ள சபரிமலை அய்யப்பன் கோவி லில் தங்கக் கவசங்களால் செய் யப்பட்டு உள்ள கருவறைக் கத வுகள், துவார பாலகர் சிலை, மேற்கூரைகள் ஆகியவற்றில் முறைகேடுகள் நடந்துள்ளன என்று பிரச்சினை கிளம்பியுள்ளது. முதலில் கவசங்களில் முறை கேடு நடந்ததாக கூறப்பட்ட வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது. எஸ்அய்டி விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சில நாட்களுக்கு முன்பு தான் கேரளா உயர்நீதிமன்றத்தின் அனுமதியுடன் எஸ்அய்டி அதிகா ரிகள் சபரிமலை கோவிலில் ஆய்வு மேற்கொண்டனர். இந் நிலையில் தற்போது சபரிமலை அய்யப்பன் கோவிலின் தங்க மேற்கூரையின் நிறம் திடீரென்று மாறி உள்ளது. தங்க மேற்கூரை யின் ஒரு பகுதி கருப்பு நிறமாக மாறி உள்ளது. தங்கத்தை பிரித் தெடுக்க யாராவது அந்த மேற் கூரை மீது திராவகம் ஏதேனும் வீசினார்களா? என்ற கேள்வி எழுந்துள்ளது. ஆனால், பக்தர் கள் நெய் வீசி இருப்பார்கள் அத னால் நிறம் மாறியிருக்கலாம் என்று கோவில் நிர்வாகிகள் தெரி வித்துள்ளனராம். தங்கம் அவ்வ எவு எளிதில் நெய்க்கு எல்லாம் நிறம் மாறும் உலோகம் அல்ல என்பது வேதியியல் படித்த எல் லோருக்கும் தெரியும். நெய்யும், மெய்யும் படும்பாடு!

இப்படி, அவர்களால் பெரிதும் கொண்டாடப்படும் பெரும்பெரும் கோவில்கள் எல்லாம் ஊழல் குற் றச்சாட்டுக்கு உள்ளாகி, ராமன், வெங்கடேசன், அய்யப்பன் எல் லாம் விசாரணை வளையத்திற் குள் இருக்கிறார்கள்.

இவற்றுக்கு இடையில் தான் எந்த ஊழலும் நடைபெறவில்லை என்று ஒன்றிய அரசு ஊடகங்க ளுக்குச் செய்தி கொடுத்துக் கொண்டிருக்கிறது.

மக்கள் விழிப்பு பெற்றே தீரு வார்கள்!

ஊழல் கூட்டம் விலையைக் கொடுத்தே தீரும்!

A முதல் Z வரை மோடி ஆட்சி யில் என்னென்ன ஊழல்கள் நடந்திருக்கின்றன என்று முன்பு ஓர் இணையதளத்தில் (www.corruptmodi.com) முழுப் பட்டி யல் வெளியிட்டிருந்தார்களே! அந்த இணையதளத்தை எல் லாம் முடக்கிவிட்டோம், மற்ற ஊடகங்களை வாயடைத்துவிட் டோம் என்ற தைரியத்தில் பேசுகி றார்களோ? அந்த விவரங்கள் எல்லாம் அழிந்துவிடவில்லை. இன்னும் பல ஊடகங்கள் வாயி லாகப் பாதுகாக்கப்பட்டே உள் ளன. மக்கள் விழிப்பு பெற்றே தீருவார்கள்! ஊழல் கூட்டம் அதற் குரிய விலையைக் கொடுத்தே தீர வேண்டும்!

இவ்வாறு கி.வீரமணி தெரி வித்துள்ளார்.

பெருகும் வருமானத்தால் திருக்கோயில் பணிகளுக்கு உதவும் என்பதால் – நகராட்சி பரிந்துரையின் அடிப்படையில்

குன்னூரில் 'மல்டி லெவல் கார் பார்க்கிங்' கொண்டு வரப்பட்டது!

சட்டப்பேரவையில் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஜூன் 24-

சட்டப் பேரவையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பேசும்போது குறுக் கிட்டு கழக உறுப்பினர் பி.கே.சேகர்பாபு பேசிய தாவது:-

இந்து சமய அறநிலையத் துறை கொடைகள் என்ற ஒரு சட்டம் இருக்கின்றது. அந்தச் சட் டத்தில் விதி 69 என்று குறிப்பிடப்பட்டிருக்கின்ற அந்தப் பணிகள், சட்ட விதிகளுக்கு உட்பட்டு, சட்டத்தின் 36வது பிரி விலிருந்துதான் மேற்கொள்ளப் பட்டன. குறிப்பாக, ஏதோ அமைச் சரே முடிவு செய்து திருமண மண்டபங்களையும், வணிக வளாகங்களையும் ஏற்படுத்துவ தற்கு உத்தரவிட்டதாக, அமைச் சர் அவர்கள் அவைக்கு உண் மைக்குப் புறம்பான தகவலைத்

தந்துகொண்டிருக்கின்றார்.

ஒவ்வொரு திட்டமும் அன் றைய காலகட்டத்தில் இருந்த சட்டப்பேரவை உறுப்பினர்களு டைய பரிந்துரையின் அடிப்படை யிலும், சட்டப்பேரவை உறுப்பி னர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலும்தான் அந்தந்தக் காலகட்டங்களில் கொண்டுவரப் பட்டது.

அதோடு மட்டுமல்லாமல், உறுப்பினர் அவர்கள் குறிப்பிட் டுக் கூறினார்; குன்னூரிலே 'மல்டி லெவல் கார் பார்க்கிங்' கொண்டுவரப்பட்டது என்று. நான் குன்னூரிலும், ஊட்டி யிலும் ஐந்து நாட்கள் முகாமிட்டு, அங்கே இருக்கின்ற 56 கோயில் களுக்கும் நேரடியாகச் சென்று ஆய்வு செய்தோம். அந்த ஆய் வின் அடிப்படையில், அந்தத் திருக்கோயில்களுக்கு வருகின்ற பக்தர்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றத் தேவையான வருமானத்தை உயர்த்துவதற்காகவும், குன்னூ ருக்குச் சுற்றுலாவிற்கு வருகின்ற மக்களுடைய வாகனங்களை நிறுத்துவதற்குப் போதிய இடமில் லாமல் தவிக்கின்ற சூழ்நிலை யைக் கருத்தில் கொண்டும், நக ராட்சியின் பரிந்துரையின் அடிப் படையில் 'மல்டி லெவல் கார் பார்க்கிங்' கொண்டுவந்தால், வருமானம் பெருகும்; அந்த வருமானம் திருக்கோயிலுடைய மேம்பாட்டுப் பணிகளுக்கு உத வும் என்பதற்காகத்தான் அந்தப் பணிகளை மேற்கொண்டோம் என்பதை அமைச்சர் அவர்களுக் குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது யார் அறிவுறுத்தி இந்த அரசாணையை வெளியிட் டிருக்கின்றாரோ, அவர்தான் அப்பொழுது ஆணையாளராக இருந்து, அவரது அறிவுறுத்த லின் பெயரில் அரசாணையை வெளியிட்டிருக்கின்றார் என்ப தைப் பேரவைத் தலைவர் அவர் களின் வாயிலாக அமைச்சருக் குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பி.கே.சேகர்பாபு குறிப்பிட்டார்.

திருவல்லிக்கேணி கூட்டுறவு சங்கத்தில்

ஒப்பந்த நியமனத்தில் முறைகேடு!

சென்னை, ஜூன். 24 -

திருவல்லிக்கேணி கூட் டுறவு நகர சங்கத்தில், கூட்டு றவு துறை விதிகளை மீறி தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்த பணியாளர்கள் நியமிக்கப்படுவதாக, புகார் எழுந்துள்ளது.

கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்படும் சங்கங் கள், பல்பொருள் அங் காடி, பெட்ரோல் பங்க், காய்கறி கடை உள்ளிட்ட பல்வேறு சேவைகளை நடத்துகின் றன. இவற்றில், ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் பணியில் உள்ளனர்.

ஒப்பந்தம் எடுக்கும் தனியார் நிறுவனங்கள், குறைந்த எண்ணிக்கை யில் பணியாளர்களை நிய மித்தல் உள்ளிட்ட பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடு வதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதுகுறித்து, கூட்டுறவு பணியாளர்கள் கூறிய தாவது:

தனியார் நிறுவனங்களி டம் இருந்து, வேலையாட் களை நியமனம் செய்வதில் பல நடைமுறை சிக்கல்கள் உள்ளன. எனவே, பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு நிறு வனங்கள் வாயிலாகவே ஒப்பந்த பணியாளர்களை நியமிக்கும்படி, 2020ல் கூட்டுறவுத் துறை புகார் உத்தரவிட்டது. அதன்படி, பல சங்கங்களில் பணி யாளர்கள் நியமிக்கப்பட்டு வந்தனர்.

திருவல்லிக்கேணி சங் கத்தில் மட்டும், 130 - 150 பணியாளர்கள் நியமிக்கப் படுவர். அவர்களுக்கு சம் பளத்தை சங்கமே தரு கிறது. தற்போது, தனியார் நிறுவனத்துக்கு பணி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு, 'ஆதாயமே' கார ணம் என்று சொல்லப்படு கிறது. இது தொடர்பாக உயரதிகாரிகள் விசா ரணை நடத்தி, உரிய நட வடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.